In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகல ஐஸ்வரியங்கள் தரும்

கணபதி மந்திரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகல ஐஸ்வர்யங்கள் தரும்

ஸ்ரீ கணபதி ஹோமம்
ஸ்ரீ கணபதி மந்திரங்கள்

வைதீக முறைப்படி

தொகுப்பாளர்

N. கிருஷ்ணமூர்த்தி

வெளியீடு மற்றும் விற்பனை உரிமை

ஸ்ரீ வன்னி விநாயகர் புத்தக நிலையம்

58-A, ஸ்ரீமீனாட்சி அம்மன் கோவில்

மதுரை – 625 001

Ph: 0452-2629512 Cell: 9894280132

விலை ரூ.30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு : 2007

உரிமை : பதிப்பகத்தாருக்கு

தொகுப்பாசிரியர்

N. கிருஷ்ணமூர்த்தி

புத்தகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும் விலாசம் :

ஸ்ரீ வன்னி விநாயகர் புத்தக நிலையம்
58-A, ஸ்ரீமீனாட்சி அம்மன் கோவில்
மதுரை – 625 001
Ph: 0452-2629512 Cell: 98942 80132

ஸ்ரீகுரு கிராபிக்ஸ் Cell : 94438 29285
2/340, சக்திநகர் 2வது குறுக்குத் தெரு,
அய்யர் பங்களா, மதுரை - 625 014

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

ஸ்ரீ மகாகணபதி யந்திரம்	5
ஸ்ரீ மகா கணபதி மந்திரம்	5
குரு, விக்நேச்வரர் ஆராதனை	6
ஸ்ரீ கணபதி வந்தநம்	6
ஸ்ரீ கணபதி ப்ரார்தநா கந பாடம்	7
ஸ்ரீ கணபதி அதர்வசீர்ஷோபநிஷத்	9
விநாயகர் அகவல் (ஔவையார் அருளியது)	12
காரிய சித்தி மாலை (காசிப முனிவர் இயற்றி, கச்சியப்பர் மொழி பெயர்த்தது)	15
விநாயகர் துதி	18
விநாயகர் திருவகவல் (நக்கீரர் அருளியது)	19
விநாயகர் கவசம்	24
ஸ்ரீ விநாயகர் ஸப்தகம்	27
ஸ்ரீ கணேச நாமாவளிகள்	29
ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்	30
ஸ்ரீ கருணாஷ்டகம்	31
ஸங்கஷ்ட நாசன கணேச ஸ்தோத்ரம்	32
ஸ்ரீ வக்ரதுண்ட தோத்திரம் (சங்கர விரசிதம்)	33
விநாயகர் ஸ்லோகங்கள்	35
ஸ்ரீ விக்ந நாசக கணேச ஸ்தோத்ரம்	36

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ துக்க நாசக கணேச ஸ்தோத்ரம்	36
ஸ்ரீ கணபதி மந்திரங்கள்	37
ஸ்ரீ கணேச புஜங்கம்	52
ஸ்ரீ ருணஹர்த்ரு கணேச மந்திரம்	55
கணபதி அதர்வ சீர்ஷ உபநிஷத்	60
சங்கடஹர சதுர்த்தி விரத பூஜை	63
கணபதி ஹோமம்	81
ஸ்ரீ கணேச அஷ்டோத்தர ஸதநாமாவளி	89
ஸ்ரீ கணேச அஷ்டோத்தர ஸதநாமாவளி	91
ஸ்ரீ கணேச அஷ்டோத்தர ஸதநாமாவளி	93
ஸ்ரீ கணேச மூலமந்த்ர த்ரிசதீ	97
ஸ்ரீ ஏகார்ண விநாயக த்ரிசதீ	102
ஸ்ரீ குணேச திரிசதி	109
ஸ்ரீ சந்தான கணேச ஸ்தோத்ரம்	115
ஸ்ரீ கணேச ஸஹஸ்ர நாமாவளி	116
மஹா ஸித்த்திதேவீ அஷ்டோத்தர சதநாமாவளி :	138
மஹா புத்த்திதேவீ அஷ்டோத்தர சதநாமாவளி :	142
ஸ்ரீ மஹாகணபதி சதுராவ்ருத்தி தர்ப்பணம்	146
சிவாலய வழிபாட்டு முறை	159

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மகாகணபதி யந்திரம்




ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே
வரவரத ஸர்வஜனம் மே வசமாநய ஸ்வாஹா ! :

ஸ்ரீ மகா கணபதி மந்திரம்

ஓம்	– பரப்பிரும்மம்
ஸ்ரீம்	– லக்ஷ்மி நாராயணர்
ஹ்ரீம்	– கௌரி கிரீசர்
க்லீம்	– ரதி மன்மதர்
க்லௌம்	– பூமிதேவி வராஹர்
க^{3}ம்	– கணபதி பீஜம் (இறை வடிவம்)
க^{3}ணபதயே	– கணபதிக்கு வணக்கம்
வர	– மேம் பட்டவனே
வரத	– விரும்பியதை அருள்பவனே
சர்வஜனம்	– எல்லா உயிர்களையும்
மே	– எனக்கு
வசம் ஆனய	– வசப்படுத்துவாயாக

இந்த மந்திரத்தை அனுதினம் 108 முறை பாராயணம் செய்ய
சகல காரியங்களும் சித்தியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு, விக்நேச்வரர் ஆராதனை

மந்த்ரங்கள் குரு மூலமாகத்தான் கற்றறியப்பட வேண்டும். க்ரியைகள் ஆச்சார்யன் மூலமாகத்தான் செய்வித்துக் கொள்ளப்பட வேண்டும். இறைவனே நம் அனைவர்க்கும் ஆதிகுரு. அவர் தொடங்கி, குருமார்களின் பரம்பரை வழிவழியாகத் தோன்றி, நம்மை வாழ வைத்து வருகின்றது. அந்தக் குரு பரம்பரையை வணங்கித்தான் எந்தச் செயலையும் தொடங்க வேண்டும்.

|| ஸ்ரீ ஹரி ஓம் ||

|| ஸ்ரீ குருப்யோ நம: ||

குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வர: |
குருஸ்ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: || 1 ||

குரவே ஸர்வ லோகாநாம் பிஷஜே பவ ரோகிணாம் |
நிதயே ஸர்வ வித்யாநாம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே நம: || 2 ||

ஸதாசிவ—ஸமாரம்பாம் சங்கராச்சார்ய—மத்யமாம் |
அஸ்மத்—ஆசார்ய—பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் || 3 ||

குரு சரணாரவிந்தாப்யாம் நமோ நம: || 4 ||

ஸ்ரீ கணபதி வந்தநம்

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்கலா |
ஜநக: சங்கரோ தேவ: தம் வந்தே குஞ்ஜராநநம் || 1 ||

கஜாநநம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபல—ஸார பக்ஷிதம் |
உமாஸுதம் சோகவிநாச காரணம்,
நமாமி விக்நேச்வர பாதபங்கஜம் || 2 ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள வன்னிமரத்தடி விநாயகர் துதி :

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்கலா |
ஜநகோ வன்னி : தம் வந்தே குஞ்ஜராநநம்: ||3||

ஸ்ரீ கணபதி ப்ரார்தநா கந பாடம்

கணாநாந்த்வா த்வா கணாநாம் கணாநாந்த்வா கணபதிம்
கணபதிம் த்வா கணாநாம் கணாநாந்த்வா கணபதிம் ||

த்வா கணபதிம் கணபதிம் த்வாத்வா கணபதி ஹவாமஹே ஹவாமஹே கணபதிம் த்வாத்வா கணபதி ஹவாமஹே | கணபதி ஹவாமஹே ஹவாமஹே கணபதிம் கணபதி ஹவாமஹே கவிங்கவி ஹவாமஹே கணபதிம் கணபதி ஹவாமஹே கவிம் |
கணபதிமிதிகண—பதிம் ||

ஹவாமஹே கவிம் கவி ஹவாமஹே ஹவாமஹே கவிம் கவீநாங்கவீநாம் கவி ஹவாமஹே ஹவாமஹே கவிங்கவீநாம் ||

கவிங்கவீநாங்கவீநாம் கவிங்கவிம் கவீநாமுபமச்ரவஸ்தம—முபமச்ரவஸ்தம—ங்கவீநாம் கவிங்கவிம் கவீநாமுபமச்ர—வஸ்தமம் ||

கவீநாமுபமச்ரவ—ஸ்தமமுபமச்ரவஸ்தமம் கவீநா—ங்கவீநா—முபமச்ரவஸ்தமம் |
உபமச்ரவஸ்தம—மித்யுபமச்ரவ:—தமம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணாம்
ஜ்யேஷ்டராஜம் ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம்
ப்ரஹ்மணோ ப்ரஹ்மணோ ப்ரஹ்மணாம் ஜ்யேஷ்டராஜம்
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மண : |
ஜ்யேஷ்டராஜமிதி—ஜ்யேஷ்ட ராஜம் ||

ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணோ ப்ரஹ்மணோ ப்ரஹ்மணாம்
ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே பதேப்ரஹ்மணோ
ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே ||

ப்ரஹ்மணஸ்பதே பதே ப்ரஹ்மணோ ப்ரஹ்மணஸ்பத
ஆபதே ப்ரஹ்மணோ ப்ரஹ்மணஸ்பத ஆ | பத ஆ
பதேபத ஆநோந ஆபதே பத ஆந : ||

ஆநோந ஆநச்—ச்ருண்வந் ச்ருண்வந்ந
ஆநச்ச்ருண்வந் | நச்—ச்ருண்வந்
ச்ருண்வந்நோநச்—ச்ருண்வந்நூதிபி
ரூதிபிச்ச்ருண்வந்நோந ச்ச்ருண்வந்நூதிபி : ||

ச்ச்ருண்வந்நூதிபி ரூதிபிச்ச்ருண்வந்
ச்ருண்வந்நூதிபிஸ்ஸீத ஸீதோதிபிச்ச்ருண்வந்
ச்ருண்வந்நூதிபிஸ்ஸீத ||

ஊதிபிஸ்ஸீத ஸீதோதிபி ரூதிபிஸ்ஸீத ஸாதந
ஸாதந ஸீதோதிபி ரூதிபிஸ்ஸீத ஸாதநம் |
ஊதிபி ரித்யூதி—பி : ||

ஸீதஸாதந ஸாதந ஸீத ஸீத ஸாதநம் |
ஸாதநமிதி ஸாதநம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ கணபதி அதர்வசீர்ஷோபநிஷத்

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம் தேவா: | பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: | ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவா ஸஸ்தநூபி: | வ்யசேம தேவஹிதம் யதாயு: | ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: | ஸ்வஸ்தி ந: பூஷா விச்வ வேதா: | ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: | ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது |

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

அத கணேச அதர்வசீர்ஷம் வ்யாக்யாஸ்யாம: ||

ஓம் நமஸ்தே கணபதயே | த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்த்வமஸி | த்வமேவ கேவலம் கர்தாऽஸி த்வமேவ கேவலம் தர்தாऽஸி | த்வமேவ கேவலம் ஹர்தாऽஸி | த்வமேவ ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மாஸி | த்வம் ஸாக்ஷாதாத்மாऽஸி நித்யம் ||1||

ருதம் வச்மி | ஸத்யம் வச்மி || 2 ||

அவ த்வம் மாம் | அவ வக்தாரம் | அவ ச்ரோதாரம் | அவ தாதாரம் | அவ தாதாரம் | அவாநூசாநமவ சிஷ்யம் | அவ பச்சாத்தாத் | அவ புரஸ்தாத் | அவ உத்தராத்தாத் | அவ தக்ஷிணாத்தாத் | அவ சோர்த்வாத்தாத் | அவாதராத்தாத் | ஸர்வதோ மாம் பாஹி பாஹி ஸமந்தாத் || 3 ||

த்வம் வாங்மயஸ் த்வம் சின்மய: | த்வம் ஆநந்தமயஸ்த்வம் ப்ரஹ்மமய: | த்வம் ஸச்சிதாநந்தாऽத்விதீயோऽஸி | த்வம் ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி | த்வம் ஜ்ஞாநமயோ விஜ்ஞாநமயோऽஸி || 4 ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்வம் ஜகதிதம் த்வத்தோ ஜாயதே | ஸர்வம் ஜகதிதம் த்வத்தஸ்திஷ்டதி | ஸர்வம் ஜகதிதம் த்வயி லயமேஷ்யதி | ஸர்வம் ஜகதிதம் த்வயி ப்ரத்யேதி | த்வம் பூமி ராபோ ஽நலோ ஽நிலோ நப: | த்வம் சத்வாரி வாக்பதாநி || 5 ||

த்வம் குணத்ரயாதீத: | த்வம் அவஸ்தாத்ரயாதீத: | த்வம் தேஹத்ரயாதீத: த்வம் காலத்ரயாதீத: | த்வம் மூலாதார ஸ்திதோ ஽ஸி நித்யம் | த்வம் சக்தித்ரயாத்மக: த்வாம் யோகிநோ த்யாயந்தி நித்யம் | த்வம் ப்ரஹ்மாஸ்த்வம் விஷ்ணுஸ்த்வம் ருத்ரஸ்த்வம் இந்த்ரஸ்த்வம் அக்நிஸ்த்வம் வாயுஸ்த்வம் ஸூர்யஸ்த்வம் சந்த்ரமாஸ்த்வம் ப்ரஹ்ம பூர்புவ: ஸ்வரோம் || 6 ||

கணாதிம் பூர்வமுச்சார்ய வர்ணாதீம் ததநந்தரம் | அநுஸ்வார: பரதர: | அர்தேந்து லஸிதம் | தாரேண ருத்தம் | ஏதத்தவ மநுஸ்வ–ரூபம் | ககார: பூர்வ ரூபம் | அகாரோ மத்யம ரூபம் | அநுஸ்வாரச் சாந்த்ய ரூபம் | பிந்துருத்தர ரூபம் | நாத: ஸந்தாநம் | ஸ(ம்)ஹிதா ஸந்தி: | ஸைஷா கணேச வித்யா | கணக ருஷி: | நிச்ருத் காயத்ரீச் சந்த: | கணபதிர் தேவதா | ஓம் கம் கணபதயே நம: || 7 ||

ஏக தந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி |
தந்நோ தந்தி: ப்ரசோதயாத் || 8 ||

(காயத்ரீ – மூன்று முறை கூறவும்.)

ஏக தந்தம் சதுர் ஹஸ்தம் பாசமங்குச தாரிணம் | ரதம் ச வரதம் ஹஸ்தைர் பிப்ராணம் மூஷக த்வஜம் | ரக்தம் லம்போதரம் சூர்ப கர்ணகம் ரக்த வாஸஸம் | ரக்த கந்தாநுலிப்தாங்கம் ரக்த புஷ்பை: ஸுபூஜிதம் | பக்தாநுகம்பிநம் தேவம் ஜகத் காரணமச்யுதம் |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவிர்பூதம் ச ஸ்ருஷ்ட்யாதௌ ப்ரக்ருதே: புருஷாத்பரம் |
ஏவம் த்யாயதி யோ நித்யம் ஸ யோகீ யோகிநாம் வர: || 9 ||

நமோ வ்ராத பதயே | நமோ கண பதயே | நம: ப்ரமத
பதயே | நமஸ்தே ऽஸ்து லம்போதராய ஏக தந்தாய விக்ன
நாசிநே சிவஸுதாய ஸ்ரீ வரத மூர்த்தயே நமோ நம: || 10 ||

ஏதததர்வசீர்ஷம் யோ ऽதீதே ஸ ப்ரஹ்மபூயாய கல்பதே | ஸ ஸர்வ விக்நைர் ந பாத்யதே | ஸ ஸர்வத்ர ஸுகமேததே | ஸ பஞ்ச மஹா பாபாத் ப்ரமுச்யதே | ஸாயமதீயாநோ திவஸக்ருதம் பாபம் நாசயதி | ப்ராதரதீயாநோ ராத்ரி க்ருதம் பாபம் நாசயதி | ஸாயம் ப்ராத: ப்ரயுஞ்ஜாநோ பாபோ ऽபாபோ பவதி | ஸர்வத்ராதீயாநோ ऽபவிக்நோ பவதி | தர்மார்த்தகாம மோக்ஷம் ச விந்ததி | இதமதர்வசீர்ஷ—மசிஷ்யாய ந தேயம் | யோ யதி மோஹாத் தாஸ்யதி ஸ பாபீயாந் பவதி | ஸஹஸ்ர ஆவர்தநாத் யம் யம் காமமதீதே தம் தமநேந ஸாதயேத் || 11 ||

அநேந கணபதிமபிஷிஞ்சதி ஸ வாக்மீ பவதி | சதுர்த்யாமநச்நந் ஜபதி ஸ வித்யாவாந் பவதி | இத்யதர்வண வாக்யம் | ப்ரஹ்மாத்யாவரணம் வித்யாந் ந பிபேதி கதாசநேதி || 12 ||

யோ தூர்வாங்குரைர் யஜதி ஸ வைச்ரவணோபமோ பவதி | யோ லாஜைர் யஜதி | ஸ யசோவாந் பவதி | ஸ மேதாவாந் பவதி | யோ மோதக ஸஹஸ்ரேண யஜதி ஸ வாஞ்சித பலமவாப்நோதி | ய: ஸாஜ்ய ஸமித் பிர் யஜதி ஸ ஸர்வம் லபதே ஸ ஸர்வம் லபதே || 13 ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஷ்டௌ ப்ராஹ்மணான் ஸம்யக் க்ராஹயித்வா ஸூர்ய வர்சஸ்வீ பவதி | ஸூர்ய க்ரஹே மஹா நத்யாம் ப்ரதிமா ஸந்நிதௌ வா ஜப்த்வா ஸித்த மந்த்ரோ பவதி | மஹா விக்நாத் ப்ரமுச்யதே | மஹா தோஷாத் ப்ரமுச்யதே | மஹா பாபாத் ப்ரமுச்யதே | ஸ ஸர்வவித் பவதி ஸ ஸர்வவித் பவதி | ய ஏவம் வேத | இத்யுபநிஷத் ||14||

(நிறைவாக) ஸஹ நாவவது | ஸஹ நௌ புநக்து | ஸஹ வீர்யங்கரவாவஹை | தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை || ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

(மீண்டும்) ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: | பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: | ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவா(க்ம்)ஸஸ்தநூபி: | வ்யசேம தேவஹிதம் யதாயு: | ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: ஸ்வஸ்தி ந: பூஷா விச்வ வேதா: | ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: | ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ||

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

விநாயகர் அகவல்

(ஔவையார் அருளியது)

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்து அழகுஎறியப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தான்எழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல்ஐந்து எழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளந்தனில் புகுந்து

குரு வடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிது எனக்கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள்கடிந்து

தலம்ஒரு நான்கும் தந்துஎனக்கு அருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்கிசை நிலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்துக்
கடையில் கழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டுஎழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டுஎழு கனலை
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல் சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆகஇனிது எனக்குஅருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்குஅருளி
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கும் ஒன்றுஇடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

காரிய சித்தி மாலை

(காசிப முனிவர் இயற்றி, கச்சியப்பர் மொழி பெயர்த்தது)

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலக முழுவதும் நீக்கமற
ஒன்றாய்நிற்கும் பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்செசன மாயும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம். 3

மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன்எவன் எண்குணன் எவன்அப்
போதமுதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம். 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்ணின் ஓர் ஐங்குணமாகி
வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றாம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன் யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம். 8

பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும்எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும். 9

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச் செப்பி மறைந்தார். 10

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புத்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே.

வாக்கு உண்டாம்; நல்ல மனமுண்டாம்; மாமலராள்
நோக்கு உண்டாம்; மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பிடிஅதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதுஅடி வழிபடும் அவர்இடர்
கடிகணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

நிகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர இன்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீஎனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் திருவகவல்

(நக்கீரர் அருளியது)

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை யறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கரனருளிய சற்குரு விநாயகா
ஏழையடியே னிருவிழி காண
வேழமுகமும் வெண் பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலின் திருநீற் றழகுஞ்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தினழகும் வீற்றிருக்க
பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன் னாபரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும் உரோமத்தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனு மாலும் விமலனு மறியாப்
பாதச் சலங்கைப் பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்புந் தங்கக் கொலுசும்
எண்டிசை மண்டல மெங்கு முழங்கத்
தொகுது துந்ததுமி தொந்தோ மெனவே
தகுகு திந்திமி தாள முழங்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடிய பாத மண்டர்கள் போற்ற
நாடிமெய்யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சிதந்தருள
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்ப் பொன்மலை போலத்
திங்கள் முடியான் றிருவுள மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடியார்க்கு
இகபர சாதன மிரண்டு முதவி
அகவினைத் துன்ப மகந்தை யறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம்பிகை தன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப் பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீஜா ட்சரமும்
ஓமென் றுதித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அட்சர வடிவும்
இடைபிங் கலைகளி ரண்டினடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாய்வோர் பத்துங்
குண்டலி யசைவிலி கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யு மறிவையுங் காட்டி
ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்சத் திகளின் பாதமுங் காட்டி
நவ்விட மௌவும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விண்டலமான வெளியையுங் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டிப்
புருவ நடுவணைப் பொற்கம லாசனன்
திருவிளை யாடலின் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டி
போத நிறைந்த பூரணங் காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவள நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகயி லாசச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவத் தொண்ணூற் றாறையு நீக்கிக்
கருவி காணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் ரிஷிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியி னருளையுங் காட்டிச்
சத்தி பராபரைசதானந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞான மமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின்மய மான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதுந் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவியிடம் பொரு ளியாவுந்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன குருவா யாட்கொண்டருளி
மோன ஞான முழுது மளித்துச்
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிஷ்கள நாட்டமுந் தந்து
குருவுஞ் சீடனும் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென றுணர்ந்து
மவுன முத்திரைய மனத்தினி லிருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தங்
கண்டது மாயைக் கனவெனக் காட்டிப்
பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈச னிணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென உணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர
நல்லா யுன்னருள் நாட்டம்தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி
நித்திய பூஜை நைவேத்தியமும்
பத்தடியாக் கொடுத்தேன் பரமனே போற்றி
ஏத்தியனுதின மெளியேன் பணியக்
கூற்றினை யுதைந்த குளிர்பதந் தந்து
ஆசுமதுர வமிர்த மளித்தும்
பேசு ஞானப் பேரெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவினுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருணகிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுந்த கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோக்கரு ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்க்கை யிடையூறகற்றிப்
புல்லரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்பதகற்றிக்
காப்ப துனக்குக் கடன் கண்டாயே
நல்லினை தீவினை நாடி வருகினுஞ்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையும் நீயே தாயும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே
உன்னருளின்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்
வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்றுத நாடியும் முக்கணமாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலாயிரத்து நானூற்று நாற் பத்தெண்
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளியே நித்தன்
பஞ்சாட்சரநிலை பாலித் தெனக்குச்
செல்வமும் கல்வியும் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயகா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணா முமையாள் பெற்றிடுந்தேவே
அரிதிரு மருகா அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற்றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த் தடத் தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்குஞ்
சச்சிதானந்த சற்குரு சரணம்
விக்கிந விநாயகா தேவே ஓம்
ஹரஹர ஷண்முக பவனே ஓம்
சிவசிவ மஹாதேவ சம்போ ஓம்.

விநாயகர் கவசம்

(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு தந்துள்ளார்.)

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிக சவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க த‌_விழிகள்
பாலசந் திரனார் காக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
    தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைகார் காக்க
    நனிவாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர் நகைதுன் முகர்காக்க அள்ளழிற்செஞ்
    செவிபாச பாணி காக்க
தவிர் தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
    நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க. 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
    காக்களம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
    பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
    யன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட்
    டினைத்துலங்கே ரம்பர் காக்க. 3

பக்கம்இரண் டையுந்தரா தரர்காக்க
    பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
    வியாளபூ டணர்தாம் காக்க
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
    காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
    கணமூர்த்தி உவந்து காக்க. 4

தாழ்முழந்தாள் மகாபுந்தி காக்கஇரு
    பதம்ஏக தந்தர் காக்க
இருவாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
    முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர் காக்க
    விரல்பதும் அத்தர் காக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர் காக்க. 5

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா
புத்திரர்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கநனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க. 6

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபுப
சாங்குசர்தாம் விரைந்து காக்க. 7

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனதம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. 8

வென்றிசீ விதம்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஒ
திடினும்பால் இடையூ றொன்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதி னாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். 9

ஸ்ரீ விநாயகர் ஸப்தகம்

குருவே பரமன் கொழுந்தே பணிந்தேன்
குவலயம் போற்றும் கண நாதா !
வருவாய் நினைவில் வந்தெனை ஆள்வாய்
வடிவேலவனின் சோதரனே
அருள்வாய் ! உனையே அனுதினம் பணிவேன்
அன்னை பராசக்தி அருள்மகனே !
திருமால் மருகா ! திருவடி சரணம் !
தீன ரக்ஷகனே கணநாதா 1

ஆனையின் அன்பன் அழகு முருகனின்
அண்ணனாய் உலகில் அவதரித்தாய்
ஆனைமுகத்தோடு ஐங்கரங்கொண்டதோர்
அற்புத வடிவே ! கணநாதா !
யானென தென்னும் எண்ணங்கள் நீக்கி
இகபரசுகமதை எனக்களிப்பாய் !
யானுனை என்றும் இராப்பகல் தொழுதேன் !
என்துயர் களைவாய் ! கணநாதா ! 2

குஞ்சரனே ! எழிற் குஞ்சரிநாதனாம்
குகசரவணபவ சோதரனே !
வெஞ்சமரெதிலும் வெற்றியே தருவாய் !
வேழமுகத்தோய் கணநாதா !
அஞ்சிடும் அன்பருக் கபயம் அளிப்பாய் !
அரவணைத் தெனையும் ஆண்டருள்வாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சமி ! பைரவி ! பர்வத புத்திரி !
பார்வதி மைந்தா ! கணநாதா ! 3

வல்லபை நாதா ! விக்ன வினாயகா
வாழ்த்திப் பணிந்தேன் உன்பதமே
வல்வினை எல்லாம் வலிமை இழந்தே
வாடிடச் செய்வாய் ! கணநாதா !
தொல்வினை யாலிவன துயருறும் அடியேன்
துன்பமெலாம் நீ துடைத்திடுவாய் !
அல்லோடு பகலும் அனவரதமும் உன்
அடியினை தொழுதேன் கணநாதா ! 4

வானொடு நீரும் வளியும் தீயும்
வையகம் யாவும் உன் வடிவே !
மானிட வாழ்வை மகிழ்வுறச் செய்வாய் !
மங்கலப் பொருளே கணநாதா !
தேனோடு பாலும் தெங்கொடு பழமும்
தெவிட்டா அமுதம் தினம் படைப்பேன்
ஊனொடு உயிரும் உணர்வும் புரப்பாய் !
உன்னடி தொழுதேன் கணநாதா ! 5

ஓமெனும் வடிவே உன் வடிவாமென
உலகிற்கெலாம் நீ உணர்த்திடுவாய்
ஆம் எனச் சொல்வாய் ! அன்னை குமாரா
ஆதரித்தருள் வாய் ! கணநாதா !
ஓமெனும் ஒலியில் உன்குரல் கேட்டே
உளமகிழ்ந்துன் புகழ்பாடிடுவேன் !
ஓமெனும் பொருளே உமையவள் பாலா !
ஒரு பரம் பொருளே ! கணநாதா ! 6

சங்கரன் மகனே ! சஞ்சலம் தீர்ப்பாய்
சக்தி குமாரா ! கணநாதா !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐங்கரனே ! உன் அடியினை தொழுதேன்
அடைக்கலம் நீயே கணநாதா !
சங்கரித்திடுவாய் சங்கடமெல்லாம்
சம்புகுமாரா ! கணநாதா !
சங்கரி மைந்தா ! சந்ததம் பணிவேன்
சரணம் ! சரணம் கணநாதா ! 7

ஸ்ரீ கணேச நாமாவளிகள்

ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரக்ஷமாம்
சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்
சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய பாஹிமாம்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா பாஹிமாம்
வேலாயுதா வேலாயுதா வேலாயுதா ரக்ஷமாம்
கலாவல்லி கலாவல்லி கலாவல்லி பாஹிமாம்
கலைவாணி கலைவாணி கலைவாணி ரக்ஷமாம்
ஜெயஸரஸ்வதி ஜெயஸரஸ்வதி ஜெயஸரஸ்வதி
பாஹிமாம்
ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரீ சரஸ்வதி ரக்ஷமாம்
மஹாலெக்ஷ்மி மஹாலெக்ஷ்மி மஹாலெக்ஷ்மி பாஹிமாம்
ஸ்ரீ தேவி ஸ்ரீ தேவி ஸ்ரீ தேவி ரக்ஷமாம்
ஜெயலெக்ஷ்மி ஜெயலெக்ஷ்மி ஜெயலெக்ஷ்மி பாஹிமாம்
ஸ்ரீ லெக்ஷ்மி ஸ்ரீ லைக்ஷ்மி ஸ்ரீ லெக்ஷ்மி ரக்ஷமாம்
பராசக்தி பராசக்தி பராசக்தி பாஹிமாம்
மஹாசக்தி மஹாசக்தி மஹாசக்தி ரக்ஷமாம்
ஓம் சிவாய ஓம் சிவாய ஓம் சிவாய பாஹிமாம்
ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ஸ்ரீ சிவாய ரக்ஷமாம்
சம்புகுமார சம்புகுமார சம்புகுமார பாஹிமாம்
சபரிகிரீஸ சபரிகிரீஸ சபரிகிரீஸ ரக்ஷமாம்
ஜெயராம ஜெயராம ஜெயராம பாஹிமாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ராம ஸ்ரீ ராம ஸ்ரீ ராம ரக்ஷமாம்
ஆஞ்சனேய ஆஞ்சனேய ஆஞ்சனேய பாஹிமாம்
அனுமந்த அனுமந்த அனுமந்த ரக்ஷமாம்
கௌரி நந்தானா கஜவதனா கணேச வரத மாம்பாஹி
அம்பிகைபாலா அன்பர்கள் சீலா தும்புருநாரதர்
ஸேவித லோலா

பாரதமெழுதிய பரமசரித்ரா ஆரமுதருளிய ஐங்கர சித்ரா
லம்போதர கங்கா தரபுத்ரா அம்பாமுகபங் கேருகமித்ரா
அரஹர வரஹர வாதியனே அரனருள் விநாயக
ஜோதியனே

கஜமுகத்தரசே கணபதியே கற்பகத்தருவே குணநிதியே
பிரணவப் பொருளே பெம்மானே பேசருமறை
புகழ்எம்மானே

இபமாமுகனே இகமாவரதா சுபமாகவும் சுமுக அருள்வாய்
ஸ்ரீ ஜயசீல விநாயகனே தேவர் தொழும் தெய்வநாயகனே!

ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலா தராவ தம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்|
அநாய கைக நாயகம் விநாசி தேப தைத்யகம்
நதா சுபாசு நாஸகம் நமாமி தம் விநாயகம்|| 1

நதேத ராதி பீகரம் நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத் ஸுராரி நிர்ஜரம் நதாதி காப துத்தரம்|
ஸுரேஸ்வரம் நிதீச்வரம் கஜேஸ்வரம் கணேச்வரம்
மஹேச்வரம் ஸமாச்ரயே பராத்பரம் நிரந்தரம்|| 2

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
தரே தரோ தரம் வரம் வரேப வக்த்ர மக்ஷரம்|

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ருபா கரம் க்ஷமா கரம் முதா கரம் யசஸ் கரம்
மநஸ் கரம் நமஸ் க்ருதாம் நமஸ் கரோமி பாஸ் வரம்|| 3

அகிஞ்ச நார்த்தி மார்ஜனம் சிரந்த நோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தநம் ஸுராரி கர்வ சர்வணம்|
ப்ரபஞ்ச நாச பூஷணம் தநஞ்ஜயாதி பூஷணம்
கபோல தாந வாரணம் பஜே புராண வாரணம்|| 4

நிதாந்த காந்தி தந்த காந்த மந்த காந்த காத் மஜம்
அசிந்த்ய ரூப மந்த ஹீன மந்தராய க்ருந் தநம்|
ஹ்ருதந்தரே நிரந் தரம் வஸந்த மேவ யோகிநாம்
தமேக தந்த மேவ தம் விசிந்த யாமி ஸந்ததம்|| 5

மஹா கணேச பஞ்ச ரத்ன மாத ரேண யோந் வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மான் கணேச் வரம்|
அரோக தாம தோஷ தாம் ஸுஸா ஹிதீம் ஸுபுத்ர தாம்
ஸமாஹி தாயு ரஷ்ட பூதிமப்யு பைதி ஸோ சிராத்|| 6

ஸ்ரீ கருணாஷ்டகம்

ஏக தந்தம் மஹா காயம் தப்த காஞ்சந ஸந்நிபம்|
லம்போ தரம் விசா லாக்ஷம் வந்தேஹம் கண நாயகம்||

மௌஞ்ஜீ க்ருஷ்ணா ஜிநதரம் நாக யஜ்ஞோப வீதிநம்|
பாலேந்து விலஸந் மௌலிம் வந் தேஹம் கண நாயகம்||

அம்பிகா ஹ்ருதயா நந்தம் மாத்ருபி: பரி பாலிதம்|
பக்த ப்ரியம் மதோந் மத்தம் வந்தேஹம் கண நாயகம்||

சித்ர ரத்ந விசித்ராங்கம் சித்ர மாலா விபூஷி தம்|
சித்ர ரூப தரம் தேவம் வந்தேஹம் கண நாயகம்||

கஜவக்த்ரம் ஸுரச்ரேஷ்டம் கர்ண காமர பூஷிதம்|
பாசாங்குச தரம் தேவம் வந்தேஹம் கண நாயகம்||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூஷி கோத்தம மாருஹ்ய தேவா ஸுர மஹா ஹவே|
யோத்து காமம் மஹா வீர்யம் வந்தேஹம் கண நாயகம்||

யக்ஷகி ந்நர கந்தர்வ ஸித்த வித்யா தரைஸ் ஸதா|
ஸ்தூய மாநம் மஹாத்மாநம் வந்தேஹம் கண நாயகம்||

ஸர்வ விக்ந ஹரம் தேவம் ஸர்வ விக்ன விவர்ஜிதம்|
ஸர்வ ஸித்தி ப்ரதாதாரம் வந்தேஹம் கண நாயகம்||

கணாஷ்டக மிதம் புண்யம் பக்தி தோ ய:படேந் நர:|
விமு க்தஸ் ஸர்வ பாபேப்யோ ருத்ர லோகம் ஸ கச்சதி||

ஸங்கஷ்ட நாசன கணேச ஸ்தோத்ரம்

ப்ரணம்ய சிரஸா தேவம் கௌரீ புத்ரம் விநாயகம்|
பக்தா வாஸம் ஸ்மரேந்நித்யம் ஆயுஷ்காமார்த்
தஸித் தயே|| 1

ப்ரதமம் வக்ரதுண்டம் ச ஏகதந்தம் த்வீதீயகம்|
த்ருதீயம் க்ருஷ்ணபிங்காக்ஷம் கஜவக்த்ரம் சதுர்த்தகம்|| 2

லம்போதரம் பஞ்சமம் ச ஷஷ்டம் விகடமேவ ச|
ஸப்தமம் விக்னராஜம்ச தூம்ர வர்ணம் ததாஷ்டமம்|| 3

நவமம் பாலசந்த்ரம்ச தசமம் து விநாயகம்|
ஏகாதசம் கணபதிம் த்வாதசம் து கஜானனம்|| 4

த்வாதசைதானி நாமானி த்ரிஸந்த்யம் ய:படேந் நர:|
ந ச விக்ன பயம் தஸ்ய ஸர்வஸித்திகரம் ப்ரபோ|| 5

வித் யார்த்தீ லபதே வித்யாம் தனார்த்தீ லபதே தநம்|
புத்ரார்த்தீ லபதே புத்ரான் மோக்ஷார்த்தீ லபதே கதிம்||6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபேத் கணபதி ஸ்தோத்ரம் ஷட்பிர்மாஸை: பலம்பவேத்|
ஸம்வத் ஸரேண ஸித்திம் ச லபதே நாத்ர ஸம்சய:|| 7

அஷ்டே ப்யோ ப்ராஹ்மணேப்யச்ச லிகித்வாய:
ஸமர்ப்பயேத்|
தஸ்ய வித்யா பவேத் ஸர்வா கணேசஸ்ய ப்ரஸாதத:|| 8

ஸ்ரீ வக்ரதுண்ட தோத்திரம்

(சங்கர விரசிதம்)

ஓம்ஓம் ஓம்கார ரூபம் ஹிமகர ருசிரம் யத்ஸ்வரூபம்
துரீயம்
த்ரை குண்யாதீத லீலம் கலயதி மனஸா தேஜ ஸோதார
வ்ருத்தி:|
யோகீந்த்ரா ப்ரஹ்மரந்த்ரே ஸஹஜகுணமயம் ஸ்வஸம்ஞும்
க^{2}ம்க^{2}ம்க^{3}ம்க^{3}ம் க^{3}ணேசம் கஜமுகம் அநிஸம் வ்யாபகம்
சிந்தயந்தி||

வம்வம்வம் விக்னராஜம் பஜதி நிஜபுஜே
தக்ஷிணே பாணி ஸுண்டம்
க்ரோம் க்ரோம் க்ரோம் க்ரோதமுத்ராத் அலித
ரிபு குலம் கல்பவ்ருக்ஷஸ்ய மூலே|
த^{3}ம்த^{3}ம்த^{3}த^{3}ம் தமேகம் த^{3}த^{4}தம் அபிமுகம்
காமதேன் வாதி ஸேவ்யம்
த^{4}ம்த^{4}ம்த^{4}ம் த^{4}ாரயந்தம் த^{3}த^{4}தம் அதிசயம்
ஸித்திபுத்திர் த^{3}த^{3}ந்தம்||

தும்தும்தும் துங்கரூபம் ககனம் உபகதம்
வ்யாப்னுவந்தம் தி^{3}க^{3}ந்தம்
க்லீம் க்லீம் க்லீம் காமநாதம் க^{3}லித மத^{3}த^{3}லம்
லோலமத்தாலிமாலம்|

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீங்கார ரூபம் ஸகல முனிஜனை:
த்யேயம் உத்திக்ஷு த3ண்ட3ம்
ஶ்ரீம் ஶ்ரீம் ஶ்ரீம் ஸம்ச்ரயந்தம் நிகில நி4தி கலம்
நௌமி ஹேரம்பலம்பம்||

க்3லௌம் க்3லௌம் க்3லௌங்காரம் ஆத்யம்
ப்ரணவமய மஹாமந்த்ரமுக்தாவலீ நாம்
ஸித்தம் விக்நேச பீஜம் சசிகர ஸத்ருசம்
யோகிநாம் த்யான கம்யம்
ட3ாம் ட3ாம் ட3ாம் ட3ாமரூபம் த3லிதம் அவப4யம்
ஸூர்ய கோடி ப்ரகாசம்
யம்யம்யம் யக்ஷராஜம் ஜபதி முநிஜ நோ ப3ாஹ்யம்
ஆப்யந்தரம் ச||

ஹும்ஹும்ஹும் ஹேயவர்ணம் ச்ருதிகணித
குணம் ஸூர்ப்பகர்ணம் க்ருபாலும்
த்யேயம் யம் ஸூர்யபிம்பே உரஸி ச விலஸத்
ஸர்ப்பயக்ஞோபவீதம்|
ஸ்வாஹா ஹும்பட் ஸமேதைஷ்ட ட2ட2ட2
ஸஹிதை : பல்லவை : ஸேவ்யமாநை:
மந்த்ராணாம் ஸப்த கோடி ப்ரகுணித
மஹிமத்யானம் ஈசம் ப்ரபத்யே||

பூர்வம் பீடம் த்ரிகோணம் ததுபரி ருசிரம்
ஷட்தலம் ஸூபபத்ரம்
தஸ்யோர்த்3தே4பத்த ரேகா வஸூதலகமலம்
பாஹ்யதோsத4ஸ்ச தஸ்ய|
மத்யே ஹூம்கார பீஜம் ததநு பகவதோ பீஜ
ஷட்கம் புராரே:
அஷ்டௌ ஸூக்லே ஸம்ஸிதௌ4 பஹூல
கணபதேர் விஷ்டரே வாஷ்டகம் ச||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த^{4}ர்மாத்யஷ்டௌ ப்ரஸித்தா திஸி விதிஸி
க^{3}ணா பா^{3}ஹ்யதோ லோகபாலாந்
மத்யே க்ஷேத்ராதி^{4} நாத^{2}ம் முநிஜனதிலகம் மந்த்ர
முத்ராபதேஸம்|
ஏவம் யோ பக்தியுக்தோ ஜபதி கணபதிம் புஷ்ப
தூ^{4}பாக்ஷ தா^{3}த்யை:
மோதகாநாம் ஸ்துதி நட விலஸத் கீதவாதி^{3}த்ர
நாதை:||

ராஜா நஸ் தஸ்ய ப்ருத்யா இவ யுவதிகுலம்
தாஸவத் ஸர்வதா SSஸ்தே
லக்ஷ்மீ: ஸர்வாங்கயுக்தா த்யஜதி ந ஸதநம்
கிங்கரா: ஸர்வலோகா:
புத்ரா: பௌத்ரா: ப்ரபௌத்ரா ரணபு^{4}வி விஜயோ
த்யூத வாதே ப்ரவீணோ
யஸ்யோஸோ விக்னராஜோ நிவஸதி ஹ்ருதயே
ப^{4}க்திப^{4}ராஜா ஸ தேவ: ||

விநாயகர் ஸ்லோகங்கள்

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபல ஸார பக்ஷிதம்|
உமாஸுதம் சோகவிநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்||

அகஜானன பத்மார்க்கம்
கஜானனம் அஹர்நிசம்|
அநேகதம் தம் பக்தாநாம்
ஏகதந்தம் உபாஸ்மஹே||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித ஸூத்ர|
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே||

ரணத் க்ஷுத்ர கண்டா நிநாதாபி ராமம்
சலத்தாண்ட வோத்தாண்டவத் பத்ம தாளம்|
லஸந் துந்தி லாங்கோ பரி வ்யாலஹாரம்
கணாதீசம் ஈசான ஸூநும் தம் ஈடே||

ஸ்ரீ விக்ந நாசக கணேச ஸ்தோத்ரம்

பரந்தாம பரம்ப்ரஹ்ம பரேசம் பரமீச்வரம் |
விக்ன நிக்னகரம் சாந்தம் புஷ்டகம் காந்தம்
அனந்தகம் ||

ஸுரா ஸுரேந்த்ரை : ஸித்தேந்த்ரை: ஸ்துதம்
ஸ்தௌமி பராத்பரம் |
ஸுர பத்மேதி ரேசம் ச கணேசம் மங்கலாசயம் ||

இதம் ஸ்தோத்ரம் மஹாபுண்யம் விக்ன சோகஹரம்
பரம் |
ய:படேத் ப்ராதருத்தாய ஸர்வ விக்னாத் ப்ரமுச்யதே||

ஸ்ரீ துக்க நாசக கணேச ஸ்தோத்ரம்

புராண புருஷம் தேவம் நாநா க்ரீடாகரம் முதா |
மாயாவினம் துர்விபாவ்யம் மயூரேசம் நமாம்யஹம் ||

பராத்பரம் சிதானந்தம் நிர்விகார ஹ்ருதஸ்த்திதம் |
குணாதீதம் குணமயம் மயூரேசம் நமாம்யஹம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ருஜந்தம் பாலயந்தம் ச ஸம்ஹரந்தம் நிஜேச்சயா |
ஸர்வ விக்னஹரம் தேவம் மயூரேசம் நமாம்யஹம் ||

நாநா தைத்ய நிஹந்தாரம் நாநா ரூபாணி பிப்ரதம் |
நாநாயுத தரம் பக்த்யா மயூரேசம் நமாம்யஹம் ||

இந்த்ராதி தேவதா வ்ருந்தை: அபுஷ்டுதம் அஹர்நிசம் |
ஸதஸத் வ்யக்தம் அவ்யக்தம் மயூரேசம் நமாம்யஹம்||

ஸர்வ சக்திமயம் தேவம் ஸர்வரூப தரம் விபும் |
ஸர்வ வித்யா ப்ரவக்தாரம் மயூரேசம் நமாம்யஹம் ||

பார்வதீ நந்தனம் சம்போ ஆனந்த பரிவர்த்தனம் |
பக்தானந்தகரம் நித்யம் மயூரேசம் நமாம்யஹம் ||

முனித்யேயம் முனிநுதம் முனிகாம ப்ரபூகரம்|
ஸமஷ்டி வ்யஷ்டி ரூபம் த்வாம் மயூரேசம் நமாம்யஹம் ||

ஸர்வ ஞானாம் இஹோத்தாரம் ஸர்வஞானகரம் சுசிம் |
ஸத்யஞான மயம் ஸத்யம் மயூரேசம் நமாம்யகம் ||

அநேக கோடி ப்ரஹ்மாண்ட நாயகம் ஜகதீச்வரம் |
அனந்த விபவம் விஷ்ணும் மயூரேசம் நமாம்யகம் ||

ஸ்ரீ கணபதி மந்திரங்கள்

1. ஏகாக்ஷர கணபதி : (கணபதி அருள் கிடைக்க)
மூலமந்திரம் : ஓம் க^{3}ம் கணபதயே நம :

2. மகாகணபதி : (பரிபூரண சித்தி)
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்^{3}லீம் க்லௌம் க^{3}ம்
கணபதயே வரவரத ஸர்வ ஜனம் மே
வசமானய ஸ்வாஹா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. மோகன கணபதி : (எப்போதும் பாதுகாப்பு)

ஓம் வக்ரதுண்ட ஏக^{3}தம்ஷ்ட்ராய
க்லீம் ஹ்ரீம் க^{3}ம் கணபதயே
வரவரத ஸர்வஜன மே வசமானய ஸ்வாஹா

4. லக்ஷ்மி கணபதி : (செல்வம் வளர)

அ) ஓம் ஸ்ரீம் க^{3}ம் ஸௌம்யாய கணபதயே
வரவரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா !

ஆ) ஓம் கம் ஸ்ரீம் ஸௌம்யாய
லக்ஷ்மீ கணேச வரவரத
ஆம் ஹ்ரீம் க்ரோம்
ஸர்வஜனம் மே வஸமானய ஸ்வாஹா !

இ) வக்ர துண்ட ஏகதம்ஷ்ட்ராய க்லீம் ஸ்ரீம் ஹ்ரீம்
க^{3}ம் கணபதயே வரவரத ஸர்வஜனம் மே
வஸமானய ஸ்வாஹா ஓம் க்லீம் ஸௌ:

5. ருணஹர கணபதி : (கடன் தொல்லை நீங்க)

ஓம் கணேச ருணம் சி^{2}ந்தி வரேண்யம் ஹூம் நம: ப^{2}ட்

6. மகாவித்யா கணபதி : (தேவியின் அருள் கிட்ட)

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கலௌம் க^{3}ம் கஏஈல ஹ்ரீம்
கணபதயே ஹஸகஹல ஹ்ரீம் வரவரத
ஸகலஹ்ரீம் ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா

7. ஹரித்ரா கணபதி : (உலகம் வயப்பட)

ஓம் ஹூம்கு^{3}ம்க்^{3}லௌம் ஹரித்ரா கணபதயே
வர வரத ஸர்வஜன ஹ்ருதயம் ஸ்தம்பய ஸ்தம்பய
ஸ்வாஹா

8. வக்ரதுண்ட கணபதி : (அதிர்ஷ்ட லாபம்)

வக்ர துண்டாய ஹூம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. நிதி கணபதி : (செல்வம் கிட்ட)

ராயஸ்பேஷஸ்ய த^{3}தி தா நிதி தோ^{3} ரத்னதா து^{3}மான்:
ரக்ஷோஹணோ ப^{3}லக^{3} ஹநோ வக்ரதுண்டாய
ஹூம்!!

10. புஷ்டி கணபதி :

ஓம் க^{3}ம் கை^{3}ம் கணபதயே விக்னவிநாசினே
ஸ்வாஹா

11. பால கணபதி : (மகிழ்ச்சி)

ஓம் க^{3}ம் கணபதயே நமஸ் ஸித்^{4}தி3தா^{3}ய ஸ்வாஹா

12. சக்தி கணபதி : (எல்லாக் காரியமும் நிறைவேற)

ஓம் ஹ்ரீம் க்^{3}ரீம் ஹ்ரீம்

13. ஸர்வ சக்தி கணபதி : (பாதுகாப்பு)

ஓம் ஹ்ரீம் க^{3}ம் ஹ்ரீம் மஹாகணபதயே ஸ்வாஹா

14. க்ஷிப்ர பிரஸாத கணபதி : (சீக்கிரம் பயன்தர)

ஓம் க^{3}ம் க்ஷிப்ர ப்ரஸாதனாய நம:

15. குக்ஷி கணபதி : (நோய் நீங்க)

ஓம் ஹூம் க்^{3}லௌம் ட^{2}ட^{2} ராஜ
ஸர்வஜன க^{3}திமதி க்ரோ^{4}த ஜிஹ்வா
ஸ்தம்ப^{3}ய ஸ்தம்பய ஸ்வாஹா

16. சந்தான லக்ஷ்மி கணபதி : (பிள்ளைப் பேறு உண்டாக)

ஓம் நமோ லக்ஷ்மி கணேசாய
மஹ்யம் புத்ரம் ப்ரயச்ச ஸ்வாஹா

17. சுவர்ண கணபதி : (தங்கம் கிடைக்க)

ஓம் க்ஷ்ம்ரியூம் க்ஷிப்ர கணபதயே ஸுவர்ணகே ஹேம
வ்யவஸ்திதாய ஸ்வர்ணப்ரதாய க்லீம் வஷட் ஸ்வாஹா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. ஹேரம்ப கணபதி : (மனச்சாந்தி)

ஓம் கூ^{3}ம் நம :

19. விஜய கணபதி : (ஜயம் ஏற்பட)

ஓம் க்லௌம் ஸ்ரீம் ஸர்வவிக்ன ஹந்த்ரே
பக்தானுக்ரஹ கர்த்ரே விஜயகணபதயே ஸ்வாஹா

20. அர்க்க கணபதி : (நவக்கிரக சாந்தி)

ஓம் க^{3}ம் கணபதி அர்க்க கணபதி வரவரத
ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா

21. உச்சிஷ்ட கணபதி : (முக்காலமும் உணர)

ஓம் நமோ பகவதே ஏக தம்ஷ்ட்ராய ஹஸ்திமுகாய
லம்போதராய உச்சிஷ்ட மகாத்மனே
ஆம் க்ரோம் ஹ்ரீம் க^{3}ம் கே^{2}கே^{2} ஸ்வாஹா

22. விரிவிரி கணபதி : (விசால புத்தி)

ஓம் ஹ்ரீம் விரிவிரி கணபதி ஸர்வம்மே
வசமானய ஸ்வாஹா

23. வீர கணபதி : (தைரியம் வர)

ஓம் ஹ்ரீம் க்லீம் வீரவர கணபதயே வ : வ :
இதம் விச்வம் மம வசமானய ஓம் ஹ்ரீம் பட்

24. ஸங்கடஹர கணபதி : (தொல்லை யாவும் நீங்க)

ஓம் நமோ ஹேரம்ப^3 மத^{3}மோதி^{3}த மம ஸர்வஸங்கடம்
நிவாராய நிவாராய ஹூம்பட் ஸ்வாஹா

25. விக்னராஜ கணபதி : (ராஜயோகம்)

ஓம் கீ^{3}ம் கூ^{3}ம் கணபதயே நம: ஸ்வாஹா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. ராஜ கணபதி

ஓம் நமோ ராஜகணபதே மஹாவீர தசபுஜ மதன கால
விநாசன ம்ருத்யும் ஹந ஹந, யம யம, மத[3] மத[3]
காலம் ஸம்ஹர ஸம்ஹர த்ரை லோக்யம் மோஹய
மோஹய
ப்ரும்ம விஷ்ணுருத்ரான் மோஹய மோஹய, அசிந்த்ய
பல பராக்ரம ஸர்வ வ்யாதீன் விநாசய, விநாசய
ஸர்வக்ரஹான் சூர்ணய சூர்ணய, நாகான் மூட[4]ய
மூட[4]ய, த்ரிபுவனேச்வர ஸர்வதோ[1]முக[2] ஹூம்பட்
ஸ்வாஹா

27. துர்க்கா கணபதி : (துக்க நிவாரணம்)

ஓம் ஹ்ரீம் க[3]ம் ஹ்ரீம் து[3]ம் துர்கா[3] புத்ராய சக்தி
ஹஸ்தாய
மாத்ரு வத்ஸலாய மஹா கணபதயே நம :

28. யோக கணபதி :

ஓம் ஹம் ஸம் க[3]ம் பகவதே நித்யயோக யுக்தாய
ஸச்சிதானந்த ரூபிணே விநாயகாய நம :

29. நிருத்த கணபதி : (கலை வளர)

ஓம் க்[3]லௌம் ஜம் ஜம் ஜம் நம் நர்த்தனப்ரியாய
சிதம்பரானந்த தாண்டவாய கஜானனாய நம:

30. ஸித்தி கணபதி : (எல்லாக் காரியங்களும் வெற்றி)

ஓம் நம: ஸித்திவிநாயகாய ஸர்வகார்ய கர்த்ரே
ஸர்வ விக்ன ப்ரசமனாய ஸர்வராஜ்ய
வச்யகரணாய, ஸர்வஜன ஸர்வ ஸ்த்ரீ புருஷ
ஆகர்ஷணாய ஸ்ரீம் ஓம் ஸ்வாஹா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31. புத்தி கணபதி : (கல்விப் பேறு)

ஓம் ஐம் வாக் கணபதயே ஸ்வாஹா

32. மோதக கணபதி : (முழுப்பலனும் கிட்ட)

ஓம் மம் மஹாகணபதயே ஏகதந்தாய ஹேரம்பாய மோதக ஹஸ்தாய நாளிகேர ப்ரியாய ஸர்வாபீஷ்ட ப்ரதாயினே ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸர்வ ஜனம் மே வசமானய ஸ்வாஹா

33. மோஹன கணபதி : (முழுப் பாதுகாப்பு)

ஓம் ஆம் க்லீம் ஸர்வசக்தி கணாதீச மாம் ரக்ஷரக்ஷ மம சான்னித்யம் குருகுரு, அஷ்டைச் வர்யாதி பூதி ஸம்ருத்திம் குருகுரு, ஸர்வதுக்கம் நாசய நாசய ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா ஆனய மோஹனோத்தம விநாயகாய ஹூம்பட் ஸ்வாஹா

34. குரு கணபதி : (குருவருள் உண்டாக)

ஓம் க^{3}ம் கணபதயே ஸர்வ விக்ன ஹராய ஸர்வாய ஸர்வ குரவே லம்போதராய ஹ்ரீம் க^{3}ம் நம :

35. தூர்வா கணபதி : (தாப நீக்கம்)

ஓம் ஹ்ரீம் க^{3}லாம் ஸ்ரீம் து^{3}ம் துரித ஹராய தூர்வா கணேசாய ஹூம்பட்

36. அபீஷ்ட வரத கணபதி : (நினைத்ததை அடைய)

ஓம் ஸ்ரீம்ஸ்ரீம் கணாதி பதயே ஏகதந்தாய லம்போதராய ஹேரம்பாய நாளிகேரப்ரியாய மோதக பக்ஷணாய மம அபீஷ்ட பலம் தேஹி ப்ரதிகூலம் மே நச்யது அனுகூலம் மே வசமானய ஸ்வாஹா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

37. கணேச காயத்ரி

1. ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி : ப்ரசோதயாத்

2. ஓம் ஏகதந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி : ப்ரசோதயாத்

3. ஓம் மகாகர்ணாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி : ப்ரசோதயாத்

4. ஓம் லம்போதராய வித்மஹே மஹோதராய தீமஹி
தந்நோ⁸ தந்தி : ப்ரசோதயர்த்

5. ஓம் மஹோத் கடாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி
தந்நோ⁸ தந்தி : ப்ரசோதயாத்

6. ஓம் தத்கராய வித்மஹே ஹஸ்திமுகாய தீமஹி
தந்நோ⁸ தந்தி : ப்ரசோதயாத்

38. ரத்ன கர்ப்ப கணபதி மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்³லீம் க்⁸லௌம் க⁸ம்
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
ஓம் நமோ பகவதே ரத்னகர்ப கணபதயே
கஏ ஈலஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் ஸ்லூம்
ப்⁴லூம் ப்⁴லூம் ப்⁴லூம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம்
ஹஸகஹலஹ்ரீம் வரவரத ஸர்வஸித்திப்ரதாய
ஸகல ஹ்ரீம் ஸர்வைச் வர்யப்ரதாய
ஹஸகல ஹஸகஹல ஸர்வாபீஷ்ட ஸித்திம்
குருகுரு ரத்னம் தேஹிம் ரத்னம் தேஹிம்
தா³பய தா³பய தா³பய ஸ்வாஹா ஸகல ஹ்ரீம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. வாஞ்சா கல்பலதா கணபதி மந்திரம்

(குமார சம்ஹிதையில் காண்பது)

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்[3]லௌம் க[3]ம் ஐம்
க ஏ ஈல ஹ்ரீம் தத்ஸவிதுர் வரேண்யம் கணபதயே
க்லீம் ஹஸகஹல ஹ்ரீம் பர்கோ தேவஸ்ய தீமஹி
வர வரத ஸௌ: ஸகல ஹ்ரீம் தீயோ யோ ந:
ப்ரசோதயாத் ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா

40. கணபதியைக் குறித்து வரும் ரிக்வேத மந்திரம்

கணனாம் த்வா கணபதிம் ஹவாமஹே
கவிம் கவீனாம் உபமஸ்ர வஸ்தமம்
ஜ்யேஷ்டராஜம் பிரம்மணாம் ப்ரம்மணஸ்பத
ஆன ச்ருண்வந் ஊதிபி: ஸீத ஸாதனம்

41. கணபதி உபநிஷத் தரும் மந்திரம்

நமோ வ்ராதாபதயே நமோ கணபதயே நம:ப்ரமதபதயே
நமஸ்தே அஸ்து; லம்போதராய ஏகதந்தாய
விக்னவிநாசினே சிவஸுதாய ஸ்ரீவரத மூர்த்தயே நம:

42. கணேசர் மாலா மந்திரம்

ஓம் நமோ மஹாகணபதயே, மஹாவீராய, தசபுஜாய, மதனகால விநாசன, ம்ருத்யும் ஹநஹந, யமயம, மத மத, காலம் ஸம்ஹர ஸம்ஹர, ஸர்வக்ரஹான், சூர்ணய, சூர்ணய, நாகா[3]ன் மூடய மூடய, ருத்ரரூப, த்ரிபுவனேச்வர ஸர்வதோமுக ஹும்பட் ஸ்வாஹா

ஓம் நமோ கணபதயே, ச்வேதார்க்க கணபதயே ச்வேதார்க்கமூல நிவாஸாய, வாஸுதேவப்ரியாய, தக்ஷப்ரஜாபதி ரக்ஷகாய, ஸூர்ய வரதாய, குமாரகுரவே, ப்ரஹ்மாதி ஸுராஸுர வந்திதாய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்வபூஷணாய, சசாங்க சேகராய, ஸர்வ மால அலங்க்ருதாய, தர்மத்வஜாய, தர்ம வாஹனாய, த்ராஹி, த்ராஹி, தே^{3}ஹிதே^{3}ஹி, அவதர, அவதர, க^{3}ம்கணபதயே, வக்ரதுண்டகணபதயே, வரவரத ஸர்வபுருஷ வசங்கர, ஸர்வதுஷ்டம்ருக வசங்கர, ஸர்வஸ்வ வசங்கர, வசீகுரு, வசீகுரு, ஸர்வ தோஷான் ப^{3}ந்த^{4}ய ப^{3}ந்த^{4}ய ஸர்வ வ்யாதீன் நிக்ருந்தய நிக்ருந்தய ஸர்வ விஷானி ஸம்ஹர ஸம்ஹர, ஸர்வதாரித்ரியம், மோசய மோசய, ஸர்வ விக்னான் சி^{2}ந்தி சி^{2}ந்தி, ஸர்வவஜ்ராணி ஸ்போடய ஸ்போடய ஸர்வ சத்ரூன் உச்சாடய உச்சாடய, ஸர்வஸித்திம் கு^{4}ரு குரு, ஸர்வ கார்யாணி ஸாதய ஸாதய, கா^{3}ம் கீ^{3}ம் கூ^{3}ம் கை^{3}ம் கௌ^{3}ம் க^{3}ம் கணபதயே ஹும்பட் ஸ்வாஹா

ஓம் நமோ ப^{4}க^{3}வதே ஸ்ரீம் ஹ்ரீம் மஹா க^{3}ணபதயே ஸ்ரீம் ஹ்ரீம் க^{4}ம் க^{3}ணபதயே க^{3}ஜான னாய மஹாபு^{4}ஜாய மஹா மஹேச்வர ஸூதாய மஹாபாசாங்குச த^{4}ராய யக்ஷக்ரஹாந் ராக்ஷஸ க்ரஹாந் பூதக்ரஹாந் ப்ரேத க்ரஹாந் பிஸாச க்ரஹாந் அந்யாஸ்ச க்ரஹாந் த^{3}ஹத^{3}ஹ சேதய சேதய சிரஸ்ஸூல கடிஸ்ஸூல லிங்கசூல பக்ஷசூல ஸர்வசூலான் த்ராசய த்ராஸய ஸர்வோப^{3} த^{2}ர வாந் நாசய நாசய ஸ்ர்வ ஜ்வராந் நாசயநாசய ஹ்ராம்ஹ்ரீம் ஹ்ரூம் ஹும்ப^{2}ட் ஸ்வாஹா

ஓம் நமோ பகவதே ஸ்ரீ மஹா கணபதயே கஜானனாய மஹாரூபாய மஹா மூஷிக வாஹநாய மகாவிக்நராஜாய மகாலம்போதராய மகாபூதவசங் கராய மகாசர்வக்ரஹ நிவாரணாய ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் சர்வஜ்வரான் சோ^{2}தய ஸர்வாரிஷ்டப்ரமசனி கஜானந நமோஸ்துதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம் ஜயஜய விஜயவிஜய அநந்தோபராஜித மகா பராக்ம ப்ரதிஹத விச்வரூப விரூபாக்ஷ விக்நேச்வர அஷ்டகுல நாகா3னாம் விஷம் சிந்தி சிந்தி பிந்தி பிந்தி சே2தய சே2தய ஆக்ஞாபய ஆக்ஞாபய ஆகர்ஷய ஆகர்ஷய ஸ்தம்பய ஸ்தம்பய மோஹய மோஹய பீ4ஷய பீ4ஷய விக்னராஜ நமோஸ்துதே

